# ஹோமியோ பிரகடணம்

223240

# ஹோமியோ பிரகடனம்.

## (HOMEO BULLETIN)

பிரதி ஆங்கில மாதம் 15-ம் தேதி

வெளியிடப்படும்.

**சந்தா விபரம்:**

வருடச் சந்தா ரூ. 6/-

தனிப் பிரதி ரூ. 0—60 பை.


நிர்வாக ஆசிரியர்:

**Dr. S. Srinivasan,** DHS, DEH (Paris) Post graduate: Germany, DDR & Switzerland etc.
Member: Tamilnadu Homeopathy Council.



*வெளியிடுபவர்:*

'ஹானிமான் ஹோமியோ இன்ஸ்டிட்யூட்'

**திருவாரூர் – '610001'** Ph: 342

**ஏஜண்ட்ஸ்:– ஓமியோ டிரக் ஸ்டோர்ஸ், திருவாரூர்.**

***கிளை:* 334, தம்புசெட்டித் தெரு,**

Ph: 29652. **சென்னை—600001**

## முக்கிய அறிவிப்பு.

ஓமியோபதி டாக்டர்கள் தங்கள் தங்கள் நோயாளிகளை பரிசோதித்து மருந்து சீட்டைப்பெற கட்டணம் ரூ 25/- தான்.

நேரிடையாக நோயாளி பரிசோதனை மருந்து சீட்டைப்பெற ரூ. 25/- முதல் ரூ 100/- வரையில் ஆகும்,

இரத்த பரிசோதனை முதலியன குறைந்த செலவில் செய்யப்படும். X-ரே பரிசோதனை மிகக்குறைந்த செலவில் செய்யப்படும்.

டாக்டர்கள் அவரவர்கள் நோயாளிகளுக்கு தபால் மூலம் கூட மருந்து சீட்டு பெற்றுக்கொள்ள முடியும்.

சென்னையில் :-

Phone: 445762

**Dr. சீனிவாசன் DHS, DEH (பாரிஸ்), AMBM (லண்டன்)**

பட்டமேற்படிப்பு :- ஜெர்மனி, DDR, ஸ்விட்ஸர்லாந்து etc.,

ஸ்பெஷாலிடி : ஓமியோபதி, கண், அகுபஞ்சர் etc.

கண் வியாதி, கான்சர் வியாதி முதலியவற்றிற்கு கன்ஸல்ட் செய்யுங்கள்.

முகவரி: 4, மாட்லி ரோடு, தியாகராயநகர், மதராஸ்-17.

---

**திரிசோடு:** லூசினம் 0/4, சோரினம் 0/3, டியூபர்கோச் 0/2 கலந்தது.

100 gm. மாத்திரை ... ரூ 5-00
400 gm. ,, ... ரூ 15-00

---

**திரிசல்ப்:** சல்பர் 0/2, சல்பனமைடு 0/2, ஆசி. சல்ப் 0/2 கலந்தது

அடிகாயங்கள், டியூமர்ஸ், சீழ் பிடித்த வியாதிகள் முதலிய பல நோய்களில் பலனளிக்கும்.

100 gm. மாத்திரை ரூ 5-00
400 gm. ,, ரூ 15-00

---

**நித்ரான்:** தூக்கக் குறைவிற்கு

பாஸி 3x, ஹயா 3x, நக்ஸ்மா 3x, வெலேரி 3x, ஸ்ட்ரமோ 3x, கேலி. புரோ 3x முதலியன கொண்டது.

50 மாத்திரை ... ரூ. 2-50


# ஹோமியோ பிரகடனம்

**(HOMEO - BULLETIN)**

ஆகஸ்டு 1978

## நெஞ்சுவலி.

பெரும்பாலும் 30 வயதிற்குமேல் அதுவும் ஆண்களாக இருந்தால் அனேகருக்கு இருதயத்தைச்சுற்றி வலி ஏற்படுவதுண்டு. சில வினாடிகள் இருந்துவிட்டு பின்பு மறைந்துவிடும்.

இதை இருதய வியாதி என்றே பெரும்பாலும் நினைக்கத் தோன்றும். இன்றைக்கு இருதய வியாதிதான் மரணத்திற்கு முதல் காரணமாக இருப்பதால் பயப்படுவது பொருத்தமே.

பயமாக இருந்தால் டாக்டரைச் சந்திப்பது நல்லது. ஒருவேளை எக்ஸ்ரே, ECG முதலியவை எடுக்கும்படியாக இருக்கலாம். உண்மையில் இம்மாதிரி வலிகள் 40 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு ஆபத்தானதல்ல. கீழேகண்ட ஆலோசனைகள் உதவக்கூடியவை.

(1) வலி இடைவிடாமல் இருந்து திடீரென்று ஏற்படாமலும் இருந்தால்,

(2) நடக்கும்போது அல்லாமல் உட்கார்ந்து அல்லது படுத்திருக்கும் நிலையிலோ அதிகமாக தெரியவந்தால்,

(3) காரில் உட்கார்ந்திருக்கும்போது மாதிரியான குறிப்பிட்ட நிலைகளில் அதிகமாக பாதித்தால்,

(4) பருவகால மாறுதல்களால் ஏற்பட்டால்,

(5) தசைகளும், எலும்புகளும் சில இடங்களில் அழுத்தப்பட்டு வலிக்குமானால்,

(6) தேகப்பயிற்சிக்குப் பின்னரும் ECG சமநிலையில் இருந்தால்,

(7) இருதய மருந்துகளினுல் சாதகப்படாமல் வாயு அல்லது அழற்சி மருந்துகளால் சாதகப்பட்டால்

இந்த மேலே குறிப்பிட்ட நெஞ்சு வலிகள் இருதய வலி சம்பந்தமானவையல்ல என்று கொள்ளலாம்.

---

223240

### சாதித்தது என்ன ?

இந்தத்துறையில் இருப்பவர்கள் உலகத்தின் பல பாகங்களிலும் என்னென்ன புது மருந்துகள் உபயோகப்படுத்தப்படுகின்றன. எப்படியெல்லாம் வியாதிகளை இப்பொழுது நவீன முறையில் கண்டு ஆராய்ந்து குணப்படுத்துகிருர்கள் என்பதை பிரெஞ்சு, ஜெர்மனி போன்ற மொழிகளில் இருந்து தமிழாக்கி தமிழக ஓமியோபதியருக்காக பாடுபடுவது இப்பத்திரிகை ஒன்றுதான்.

ஆகவே, உலகம் எங்ஙனும் காணப்படும் புதிய மருந்து புதிய ஆராய்ச்சியென்ருல் எங்கள் **Dr. S. Srinivasan,** DHS, DEH (Paris) AMBM (Lon), PG : Germany, DDR & Swiss etc. அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டு கட்டுரைகள் வருவதை அடிக்கடி காணலாம். இது மகத்தான சாதனையல்லவா?

---

## சின்க் சார்கோலாக்டேட் (Zinc Sarcolactate)

இது சின்க் ஆக்ஸைடு ஆசிட் சார்கோலாக்டிக் Flucka உடன் கலந்து தயாரிக்கப்பட்டது.

6x வீரியத்தில் 110 ஆண் எலிகள், 500 பெண் எலிகள் இவைகள் நீந்த விடப்பட்டன. குறிப்பாக சின்க் சார்கோலாக்டேட் 6x கொடுக்கப்பட்ட எலிகள் 20·8 – 26 6% அதிகப்படியாக உழைப்பைக் காண்பித்தன.

128 எலிகளுக்கு (மொத்தம் 583) சோடியம் பாஸ்போ கிரியாடினினேட் கொடுக்கப்பட்டது. அவைகளின் உழைப்பு 12 5 – 21 5% இருந்தது.



1210 சுண்டெலிகள், 500 எலிகள் உபயோகப்படுத்தப்பட்டன. இவைகளுக்கு 3x–7CH வரை இம்மருந்து உபயோகப்படுத்தப்பட்டது. 4x வீரியத்திற்கு மேற்பட்டால் களைப்பை நீக்கும் நல்ல மருந்தாக பயன்பட்டது. இவைகளில் மருந்தின் பலனை அல்லது பயனை கண்டுபிடிக்க உறிஞ்சும் ஸ்பெக்ட்ரோ போட்டோ மெட்ரிக் கையாளப்பட்டது.

தசை பலவீனம், உழைப்பினுல் அதிக களைப்பு, பிற்பகலில் தசை பிடிப்பு, தூங்குவதற்கு சிரமம், பொதுவாக களைப்பு இவைகளுக்கு சிறந்த மருந்தாக இது காணப்பட்டது.

பாஸ்போ கிரியாடினின் சோடியம் யாவரும் அறிந்த களைப்பு நீக்கும் மருந்தாகையால் பிராணியின் எடையில் 8000 பங்கு கரைத்து கொடுக்கப்பட்டது. சில எலிகள் மருந்து இல்லாமல் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இம்மருந்துகள் வாய் மூலமாக செலுத்தப்பட்டன.

இந்த பரிசோதனை **Dr. J Boiron,** Paris. **D. Maillot** இவர்களால் பரிசோதிக்கப்பட்டது.

---

## கால்சியம் காஸ்டிகம் (Calcium Causticum)

ஸ்டிராஸ்பூர்க் ஓமியோபதி டாக்டர்களால் பரிசோதிக்கப்பட்டு ப்ரூவ் செய்யப்பட்டிருக்கிறது. 30 வீரியத்தில் 3 நாள் ஒன்றிரண்டு தடவை 5 சொட்டு வீதம் கொடுக்கப்பட்டது.

**கேஸ் 1:** பெண் 83 – 2—7—1946

அக்கி வந்த வயிற்றுப் பாகத்தில் வலிக்காக வந்தாள். 45-ம் வருடம் ஏற்பட்ட வடுக்கள். இந்த வலிக்காக பல வலி குறைக்குர் மருந்துகள் சாப்பிடப்பட்டன. ரத்தத்தில் யூரிக் ஆசிட் 0 62 Mg. இடுப்பில் துணி கட்ட முடியவில்லை. அடிக்கடி வலி தொந்திரவு. பகல் இரவு நைப்பு அல்லது வரண்ட காலம் எப்படியிருந்தாலும் வலி வந்து கொண்டிருந்தது.

காஸ்டிகம் 30 CH 3 சொட்டு வீதம் 4 மணிக்கொரு தடவை கொடுக்கப்பட்டது.

முதல் 8 நாள் வலி இருந்தபோதிலும்கூட வரும் தடவைகள் குறைந்தன. அதன் பின்னர் ஒரு நாளைக்கு ஒன்றிரண்டு தடவைதான் வந்தது.

பிறகு காலை, மாலை 5 சொட்டு மாத்திரம் சாப்பிடச் சொன்னேன். 7 வாரத்திற்குள் பூரணமாக குணம் கண்டு விட்டது.

**கேஸ் 2:** பெண் 68.

1939இல் இடது பக்கம் விலா எலும்புக்கு இடையே அக்கி இருந்தது. 5-11-47இல் என்னிடம் வந்தாள். வலது விலாப்புறத்தில் அக்கி வலி மாதிரி இருந்தது. துணிகூட பட முடியாத அளவிற்கு வலி. குளிர்ந்த காற்றினால் அதிகரிக்க வில்லை. படுத்திருந்தாலும் நின்றிருந்தாலும் ஒரே மாதிரி இருந்தது.

5 சொட்டு காஸ்டிகம் 30 CH காலை மாலை கொடுக்கப்பட்டது 3 டோசில் பூரண குணம்.

.........

[தொடரும்]

## சேலத்தில் இஞ்செக்ஷன் மாநாடு

15-7-73 அன்று Dr. S Srinivasan, DHS, DEH (Paris) தலைமை தாங்க, திரு. C. செல்லப்பன், MABL., IAS, மாவட்ட ஆட்சியாளர் திறந்து வைக்க, சேலம் மாவட்டத்து 200 டாக்டர்களுக்குமேல் பங்குகொள்ள சிறப்பாக நடந்தது. டாக்டர் ஒருவரின் அன்புக்கிசைந்து 16 மெழுகுவர்த்தி பொருத்திய கேக் மாவட்ட ஆட்சியாளர் அவர்களால் வெட்டப்பட்டு முதல் துண்டு Dr, S சீனிவாசன் அவர்களுக்கு கொடுக்கப்பட்டு விழா ஆரம்பமாகியது.

சங்கத்தலைவர் Dr. A. V. சுப்பிரமணியம் வரவேற்றார். சங்க செயலர் Dr. அனந்தபத்மநாபன் ஆண்டறிக்கை வாசித்



தார். டாக்டர் ஹானிமான் படத்தை திறந்த பின்னர் Dr. சூஸ்லர் படத்தை கோபி Dr. பாலகோபால் திறந்து வைத்தார். பேசுகையில் சூஸ்லர் பயோகெமிஸ்டிரி ஹானிமான் சொன்ன மிகக் குறைவான டோஸ் என்பதைத்தவிர வேறு எதையும் ஒப்புக்கொள்ளவில்லை. அப்படியிருப்பினும் அந்த வைத்திய முறையும் இன்று பரவலாக இருக்கிறது. ஓமியோபதியர்களும் அதை கையாளுகிறார்கள். மேலும் அகில இந்திய ஓமியோபதி இஞ்செக்ஷன் கமிட்டி கோயம்புத்தூரில் நடைபெறுவதைப்பற்றியும் விரிவாகப் பேசினார். சில புரட்டர்கள் அப்பாவி ஓமியோபதி டாக்டர்களை ஏமாற்றி வருவதைக் கண்டித்து ஓமியோபதி டாக்டர்கள் விழிப்புடன் செயலாற்ற வேண்டுமென்று வேண்டிக்கொண்டார்.

இலவச மருத்துவ மனையில் பணிபுரிந்த டாக்டர்களுக்கு மாவட்ட ஆட்சியாளர் சான்றிதழ் வழங்கினார். இலவச மருத்துவ மனைக்கு உதவி புரிந்துவரும் திரு. **வனவாசிமல்லிச் செட்டியார்** அவர்களுக்கு அவர் தர்மத்தைப் பாராட்டி அன்பளிப்பாக மாவட்ட ஆட்சியாளர் மூலம் Dr. ஹானிமான் படம் அளிக்கப்பட்டது.

Dr. T. C P நம்பியார் கோவை, அகில இந்திய ஓமியோபதி இஞ்செக்ஷன் கமிட்டி செயலாளர் இஞ்செக்ஷன் பற்றி தான் எடுத்துக்கொண்டிருக்கும் நடவடிக்கைகள், அதில் 45 சங்கங்கள் இணைந்திருப்பது பற்றியும், 7, 8 ராச்சியங்கள் நம்முடன் சேர்ந்து போராட முன்வந்திருப்பது பற்றியும் விரிவாக எடுத்துக்கூறினார்.

Dr. S R. S. நாயுடு-சங்கத்தின் உபதலைவர், Dr. T. N. கோவிந்தசாமி, Dr. Y. V. ஜான் சிறப்பான சொற்பொழிவாற்றினார்கள்.

தலைவர் **Dr. S. சீனிவாசன்** ஆரம்பத்தில் தமிழ்நாடு ஓமியோபதி சட்டத்தின் இரு நோக்கங்களையும் அதாவது பதிவு. ஓமியோபதி வளர்ச்சி இரண்டையும் எப்படி நடத்தப் போகிறது என்பதையும் சேலம் மாவட்ட ஆட்சியாளர் ஒரு திறமை

சாலி. ஏழைகளிடம் அன்பு மிக்கவர். அப்படிப்பட்டவர் ஒரே மாதத்தில் அனுபவ சான்றிதழ் தர ஏற்பாடு செய்ய ஒப்புக்கொண்டது சேலம் ஓமியோபதி டாக்டர்களின் நல்ல அதிர்ஷ்டமே என்றும் காலதாமதப்படுத்தாமல் மாவட்ட ஆட்சியாளர் சான்றிதழ் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் கூறி விளக்கினார். பிற்கால திட்டமாக கோயம்புத்தூரில், சென்னையில் ஓமியோ காலேஜுகள் இனியும் உண்டாகப் போவது பற்றியும், ஓமியோபதி சிறப்பை மக்களுக்கு விளங்க வைக்க தனியார் துறை ஆஸ்பத்திரிகள் நிறுவப்பட இருப்பதைப்பற்றியும், நம்மிடையே ஒற்றுமை காணப்படாதது பற்றி பொருட்படுத்தத் தேவையில்லை என்றும், பயிரினூடே கோரை வளருவது வழக்கம்தான் என்றும், அதற்காக யாரும் கவலைப்படவேண்டாமென்றும் கூறினார் நம்முடைய உழைப்பை ஏணியாகக்கொண்டு சிலர் புகழ்பட விரும்புவது அதிசயமல்ல என்பதை சுட்டிக்காட்டினார்.

ஓமியோபதி இஞ்செக்ஷன் என்பது கவுன்சில் மூலமாக பெறக்கூடிய விஷயமல்ல. அகில இந்திய ரீதியில் ஓமியோ விஞ்ஞான குழுவுடன் சண்டையிட்டு மருந்து சட்டத்தை எதிர்த்து கோர்ட்டில் வாதாடி, சட்டம் தவறு என நிரூபிக்க வேண்டும். விஞ்ஞான அடிப்படையில் இஞ்செக்ஷன் அவசியம்தான் என்பதை நிரூபிக்க சிறந்த அத்தாட்சிகள் பிரெஞ்சு ஜெர்மன் மொழியில்தான் உள்ளன என்பதை எடுத்துச் சுட்டிக் காட்டி, அத்தகைய அத்தாட்சிகள் நூற்றுக்கணக்கில் தான் கஷ்டப்பட்டு சேகரித்து வைத்திருப்பதையும், அதை ஓமியோபதியர்களுக்காக உபயோகிக்க தயாராயிருப்பதையும் சுட்டிக்காட்டினார்.

சிலர் நோயாளிக்கு இஞ்செக்ஷன் கொடுத்தேன். அவர்கள் குணப்பட்டுவிட்டார்கள் என்று நோயாளியிடம் கையெழுத்து வாங்கி பிரஸிடெண்ட் முதலியவர்களுக்கு அனுப்பலாம் என்று கூறி வருகின்றனர். நோயாளிகளுக்கு உண்மையிலேயே குணமாகியிருந்தாலும் கூட இதை யாரும் நம்பமாட்டார்கள். கொடுக்கப்பட்ட மருந்து ஓமியோபதி



மருந்துதானா என்பதற்கும் அத்தாட்சி கிடையாது. மேலும் இந்திய சர்க்கார் அமைத்திருக்கும் வல்லுனர் அடங்கிய குழுவில் வாதாடுவதற்கு தகுதியும் வேண்டும். அடிப்படை தகுதியில்லாதவர்கள் இதில் தலையிட்டால் எதிர்ப்பும் தோல்வியும் தான் மிஞ்சும். ஆகவே தான் கோர்ட் மூலம் நடவடிக்கை எடுப்பது தான் சரி. ஆகவே நிதி உதவி எல்லோரும் செய்யவேண்டும் என்று கூறி எல்லோரும் ஒருமனதாக ஏற்றுக்கொண்டனர். அடுத்த மாத இறுதியில் நடைபெறும் அகில இந்திய ஓமியோபதி மாநாட்டில் கலந்துகொள்ள எல்லோரும் சம்மதம் அளித்தனர்.

இனிப்பு, காரம், சிற்றுண்டி வழங்கி தேசிய பண்ணுடன் கூட்டம் இனிதே முடிவடைந்தது.

---

## முக்கிய செய்தி!

ஓமியோபதி டாக்டர்கள் பதிவு செய்து கொள்வதற்கான "பாரங்கள்" — தமிழ்நாடு ஓமியோபதி கவுன்சில் பதிவாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ஒவ்வொரு டாக்டரும் தங்கள் பெயர், விலாசம் தெளிவாகக் குறிப்பிட்டு பாரத்திற்கு ரூ. 5/- மணியார்டர் அல்லது போஸ்டல் ஆர்டர் மூலமாக அனுப்பிவைக்கவும்.

பதிவாளர்,<br>
தமிழ்நாடு ஓமியோபதி கவுன்சில்,<br>
36, பார்த்தசாரதி நாயுடு தெரு,<br>
சென்னை — 600005.

மேற்கண்ட விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

துரிதமாக ஒவ்வொரு டாக்டரும் அந்தந்த மாவட்ட ஆட்சியாளரிடம் அனுபவ சான்றிதழ் பெற்று, பாரம் 6-ஐப் பூர்த்தி செய்து, பதிவாளருக்கு பதிவிற்காக விண்ணப்பித்துக் கொள்ளவும்.

---

## திருவாரூர் டானிக்குகள்...

**லாசோன்:** சிறந்த கருப்பாசய டானிக்
100 மிலி ... ரூ. 3—50

அல்பால்பா
அல்பால்பா 'பி' } இயற்கை வைடமின் சத்து கலந்த டானிக்குகள்.

**ஓமோ கிரைப்:** கிரைப் வாட்டர். 100 ml. ரூ. 1—75

**அயமால்:** சிறந்த இரும்பு டானிக் 450 gm ரூ. 7—00

**ஷார்க்ஆரஞ்சு:** சிறந்த சத்து டானிக்
220 gms ரூ. 5—00

**எபடால்:** இருமல் டானிக்

**காபில்:** ஆஸ்த்மா டானிக்

**கிட்டி ட்ராப்ஸ்:** குழந்தைகளுக்கு "மல்டி மினரல்" வைடமின் சத்துத் துளிகள்—வளர்ப்பு டானிக்.
15 ml. ரூ. 1—75

**கிட்டி டானிக்:** குழந்தைகளுக்கும், மெலிந்தவர்களுக்கும் சிறந்த கால்சியம், இரும்பு கலந்த டானிக்.
100 ml. ரூ 3—00

அகில உலக பிரசித்திப்பெற்ற 'திருவாரூர்' டானிக்குகள் பல பல!




## அகில இந்திய ஓமியோபதி சங்கம் பாராட்டுவிழா

இம்பீரியல் ஓட்டலில் மாண்புமிகு சுகநல அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் M A.. மாண்புமிகு அமைச்சர் சாதிக் பாட்சா B. A., B. L., மாண்புமிகு அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்களைப் பாராட்டியும்,

தமிழ்நாடு ஓமியோபதி கவுன்சில் உறுப்பினர்களைப் பாராட்டியும் அறுசுவை தேனீர் விருந்துடன் விழா கொண்டாடப்பட்டது.

சென்னையிலிருக்கும் Dr. சீராமுலு, Dr. S. சீனிவாசன் DHS, DEH (Paris), Dr. கோபிக்கர் DHMS, Dr, சாகுல்அமீது கலந்து கொண்டனர்.

சங்கத்தலைவர் Dr. பேகம் வரவேற்றார். Dr. சீராமுலு கவுன்சில் இனிமேல் துரிதமாக செயல்படுமென்று உறுதி கூறினார்.

Dr. கோவிந்தராவ் சென்னையில் சிறு சிறு ஓமியோபதி டிஸ்பென்சரிகள் திறக்கப்பட வேண்டுமென்று கோரினார்.

Dr. S. சீனிவாசன் பாராட்டிற்கு நன்றி தெரிவித்து தமிழக சுகநல அமைச்சர் மாண்புமிகு அன்பழகன் காட்டிவரும் ஊக்கத்திற்கும் நன்றி தெரிவித்துப் பேசுகையில் ஓமியோபதி சிறந்த வைத்தியம் என்பதை மக்களிடையே தெரிவிக்க பல சிறு டிஸ்பென்சரிகள் போதாது. கூட்டாகச் சேர்ந்து பல அலோபதி டாக்டர்கள் ஆரம்பித்திருப்பதுபோல வாலண்டரி ஓமியோபதி சர்வீஸஸ் என்பதாக படுக்கை வசதிகளுடன் ஆஸ்பத்திரிகள் ஆரம்பிக்கப்படவேண்டும். பலதுறை வல்லுனர்களான டாக்டர்கள் அதில் பணிபுரியவேண்டும். பல துறைகளிலும் ஓமியோபதி சிறந்த சிகிச்சை எப்படி அளிக்க முடியும் என்பதை மக்களுக்கு நேரிடையாக காண்பித்தால்தான் மக்களுக்கு நம்பிக்கை விழும். சுகநல அமைச்சர் அவர்கள் கோட்டை செகரடரியேட் ஊழியர்களுக்காக ஒரு சித்த மருத்துவ ஆஸ்பத்திரி திறந்து வைத்திருக்கிறார். அதுபோல ஓமி

(223240)

யோபதி மருத்துவ ஆஸ்பத்திரி ஒன்று கோட்டையிலே திறக்க வேண்டும். கோட்டையில் ஆரம்பித்த பணி தமிழ் நாடெங்கும் ஒலிக்கவேண்டும் அப்படிப்பட்ட ஒரு வாய்ப்பு ஏற்படுமேயானால் இன்றைக்கு பிரான்சு தேசத்திலே வெகு வேகமாக ஆராய்ச்சியுடன் மிளிர்ந்துவரும் ஓமியோ மருத்துவம் தமிழ் நாட்டிலாவது வளம்பெறவளர்ச்சிபெறமுடியும் என்றபொழுது

மாண்புமிகு சுகநல அமைச்சர் அன்பழகன் "நீங்கள் ஆனரரியாக வேலை செய்கிறீர்களா" என்று கேட்டார்.

உடனே Dr. சீனிவாசன் அதை ஏற்றுக்கொண்டு கண்டிப்பாக பணிபுரிகிறேன் என்றார். மேலும் இனமாக ரூ. 2000த்திற்கு மருந்து சப்ளை செய்வதாகவும் கூறினார் (பலத்த கைத்தட்டல்) தொடர்ந்து பேசுகையில் ஓமியோபதிக்காகவும், ஓமியோபதி டாக்டர்களுக்காக இம்மாதிரி பணிபுரிய காத்திருப்பதாகவும் தமிழக மக்களுக்கு நல்லதோர் முறையிலே பணிபுரிய வாய்ப்பு கொடுத்தற்கு சுகநல அமைச்சர் அவர்களுக்கு நன்றியும் கூறி, இம்மாதிரி ஒரு சூழ்நிலை ஏற்படுத்திக் கொடுத்த ஓமியோபதி டாக்டர்களுக்கு நன்றி கூறி விடை பெற்றார்.

மாண்புமிகு சாதிக்பாட்சா அவர்கள், மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து அவர்களும் தமிழக அரசு ஓமியோபதிக்காக செய்த பணிகளை எடுத்துக்கூறி இம்முறை சிறப்புற வளர வேண்டுமென்று வாழ்த்தினார்கள்.

"கோட்டையில் ஓமியோபதி மருத்துவமனை"

மாண்புமிகு சுகநல அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் கருத்துச்செறிந்த விளக்கமானதோர் சொற்பொழிவாற்றினார்

ஓமியோபதி மருத்துவத்திற்காக எதிர்கட்சியிலிருந்த போதே எவ்வளவு பாடுபட்டோம் என்பதையும், சிறப்புள்ள எந்த முறையும் 20, 25 ஆண்டுகளுக்கு பின்னர் என்னென்ன ஏற்படப்போகிறது என்பதைப்பற்றி இப்பொழுது கவலைப்பட வேண்டியதில்லை. அதிலுள்ள நல்ல அம்சங்கள் தமிழ் மக்க



ளுக்கு இன்றைக்கு பிரயோசனப்படவேண்டும் என்பதுதான் முக்கிய கருத்து. ஆகவே கவுன்சில் ஒன்றை நிறுவி மருத்துவர்களை தரப்படுத்தி பதிவுசெய்யவும், யாவரும் ஓமியோபதி வைத்தியம் செய்து கொள்ளலாம் என்ற பரவலான எண்ணத்தைத்தவிர இத்தொழிலையே ஓரளவு தேர்ச்சி பெற்றவர்கள் மேலும் உண்மையிலேயே ஓமியோபதி தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் தொடர்ந்து தொழிலில் இருக்கவும் வழிசெய்யப்பட்டிருக்கிறது என்றும், மேலும் மேலும் மறு பயிற்சி வகுப்புகள் 3-6 மாத காலம் ஆங்காங்கே வல்லுனர்களின் உதவிகொண்டு நடப்பிக்கப்படவேண்டுமென்பதாகவும் அம்மாதிரி பயிற்சி பெற்றவர்களுக்கு விசேட சலுகைகளுக்கு வழி செய்யப்படலாம் என்றும் கூறினார்.

மேலும் ஓமியோபதி டாக்டர்களில் 50% அலோபதி மருந்துகளை உபயோகிக்கிறார்கள் என்பதை கண்டித்து ஓமியோபதி டாக்டர்கள் ஓமியோபதி மருந்தையே உபயோகிக்க வேண்டும் என்று எடுத்துக்கூறி, பதிவுச் சான்றிதழ் கொடுக்குப்போது ஒவ்வொரு ஓமியோபதியரும் ஓமியோபதி மருந்துகளையே உபயோகப்படுத்தவேண்டும் என்றொரு உறுதி மொழியை வாங்கிக்கொள்ள வேண்டுமென்றும் கூறினார்

Dr. S. சீனிவாசன் கேட்டபடி 1 மாத காலத்திற்குள் கோட்டையில் ஒரு நாற்காலி அவருக்கு கொடுக்கிறேன், முதல் டாக்டராக Dr சீனிவாசனை வைத்து ஆரம்பித்து விடுகிறேன். இதை முதலமைச்சர் கலைஞரிடம் சொல்லியும்— முதலமைச்சருக்கு சீனிவாசனை நன்றாக தெரியும். அவருக்கு ஆசிரியராகவும் இருந்திருக்கிறார் என்று வாழ்த்து கூறி விடை பெற்றார்.

---

## வட்டாரச் செய்திகள்.

**1-7-73 ஞாயிறன்று துறையூர் வட்ட ஹோமியோபதி டாக்டர்கள் மாதாந்திரக் கூட்டமும், ஹானிமான் அவர்களின் பிறந்ததின விழாவும் நடைபெற்றது.**

ஸ்ரீவைகுண்டம் வட்டார ஹோமியோபதி டாக்டர்கள் சங்கம் 22-7-73ல் டாக்டர் இரா. இசக்கிமுத்து தலைமையில் கூடி ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிறுதினம் கூட்டம் நடத்த தீர்மானிக்கப்பட்டது.

☆ ☆ ☆

இராஜபாளையம் ஹோமியோபதி டாக்டர்கள் சங்கக் கூட்டம் 22-7-73ல் டாக்டர் *M.* ராமசாமி தலைமையில் கூடி, டாக்டராய் பதிவுபெற கலெக்டரிடம் சான்றுபெற, ஏற்கனவே பெற்ற சான்றை சாக்ஷியமாய் கொண்டு சான்றிதழ் கொடுக்க, அரசையும், கவுன்சிலையும் கேட்டுக்கொண்டு தீர்மானிக்கப் பட்டது.

☆ ☆ ☆

பல்லடம் தாலுக்கா ஹோமியோபதி டாக்டர்கள் சிறப்புக்கூட்டம் திருப்பூர் லக்ஷ்மி நகரில் நடைபெற்றது. பல்லடம் சங்கத்திற்கு மூன்று ஆண்டு காலத்திற்கான நிர்வாகிகளாக தலைவர் *A. V.* வெங்கடாசலம், உபதலைவர் டாக்டர் *G.* ஆறுமுகம், பொதுச்செயலர் டாக்டர் *N.* ஜம்புஜேஸ்வரன், பொக்கிஷதார் டாக்டர் *V.* சுப்ரமணியம், மேலும் 7 கமிட்டி மெம்பர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

☆ ☆ ☆

திருச்சி வட்ட ஹோமியோபதி டாக்டர்கள் சங்கக் கூட்டம் 29-7-73ல் Dr. S. S. M. யூசுப்ஹுசைன் அவர்கள் தலைமையில் கூடியது. பல டாக்டர்கள் சொற்பொழிவாற்றினார்கள். ஹோமியோபதி டாக்டர்களை பதிவுசெய்ய மாவட்ட ஆட்சியாளர் சான்றை பெற விண்ணப்பிக்கும்போது, முன்பு மதுவிலக்கு சட்டத்தின்கீழ் பெற்றுள்ள சான்றை சாட்சியாகக் கொண்டு, சான்று வழங்க ஆலோசனைகூற, தமிழக அரசை கேட்டுக்கொர்ண்டு தீர்மானிக்கப்பட்டது.

☆ ☆ ☆

11-7-73ல் புலிவாய் கிராமத்தில் திரு. பாலசுப்ரமணியன் குமாரர் செய்யூர் Dr. B கன்னியப்பனுக்கும், ஷை கிராம மணியம் திரு P D வீரராகவன் குமாரத்தி Dr. ஜெயமணிக்கும், திருமணம் மிகச் சிறப்பாய் நடைபெற்றது. வாழ்க மண மக்கள்!



வடஆற்காடு மாவட்ட ஹோமியோபதியர்கள் சங்கக் கூட்டம் 29-7-73ல் காட்பாடி திலகா கிளினிக்கில் கூடியது. Dr. L. M ஜோஸப் முதலிய டாக்டர்கள் சிறப்புரை ஆற்றினார்கள்.

☆ ☆ ☆

கரூர் தாலூகா ஹோமியோபதி டாக்டர்கள் சங்கப் பேரவைக்கூட்டம் **Dr. M. அங்கமுத்து மருத்துவ மனையில் 5-8-73ல்** 1973-74 ஆண்டுக்கான நிர்வாகிகளை தேர்ந்தெடுத்தது. பல தீர்மானங்கள் நிறைவேறியபின் கூட்டம் இனிது முடிந்தது.

☆ ☆ ☆

கன்னியாகுமரி ஜில்லா ஹோமியோபதி மருத்துவர்கள் சங்கக்கூட்டம் 27-7-73ல் நடைபெற்றது. இவ்வாண்டுக்கு *Dr. E.* பாகவி அவர்கள் தலைவராகவும், *Dr. A.* மகாராஜ பிள்ளை அவர்கள் காரியதரிசியாகவும், *Dr.* செல்வதாஸ் துணை காரியதரிசியாகவும், மற்றும் நிர்வாகக்குழு அங்கத்தினர்களை தேர்ந்தெடுத்தபின் இனிது முடிவுற்றது.

☆ ☆ ☆

மதுரை மாவட்ட ஹோமியோ டாக்டர்கள் கூட்டம் 29-7-73ந்தேதி *Dr. U.* பாக்யநாதன் தலைமையில் நடைபெற்றது. பல பகுதிகளிலிருந்தும் டாக்டர்கள் கலந்து கொண்டனர்.

---


## 73-வது நேர்முக வகுப்பு: (சென்னையில்)

—செப்டம்பர் 20 முதல் 1 வாரம்

**உடன் விண்ணப்பிக்கவும்.**

வழக்கம்போல், சினிமா படங்கள், பெண்களின் வியாதி பற்றி நேர்முகமாக லேடி டாக்டர் பயிற்சி முதலியன உண்டு.

**கட்டணம் ரூ. 55/– மட்டில்:**

**ஹானிமான் ஹோமியோ இன்ஸ்டிட்யூட்,**
**334, தம்புசெட்டித்தெரு. சென்னை–1.**

## TRISODE:

The three nosodes –

Psor – $\frac{0}{3}$ Leusin – $\frac{0}{4}$ Tub. Koch– $\frac{0}{4}$

Very effective in many ailments– esp. chronic ones.

100 gms tablets : Rs. 5—00
400 gms tablets : Rs. 15—00

## TRISULF:

A very effective combination of three Sulfas:

Sulfur– 0/2
Sulfonamide– 0/2
Ac. Sulf– 0/2

Very effective in injuries, septic conditions, suppurations, and many other ailments:

100 gms tablets : Rs. 5—00
400 gms tablets : Rs. 15—00

**SULFENICOL:** A special medicine of Sulph. for all inflammatory diseases, infections, and acute pains etc:

20 caps Rs. 5—00
125 caps Rs. 22—50 (Nett)

## BIO CHEMISTRY.

(with extra 4 remedies)

*by* **Dr. S. Srinivasan,** DHS, DEH, (Paris) AMBM (Lon;)

Rs. 3—00
Postage Rs. 1—00



# Febrile convulsions:

**Dr. S. Srinivasan**, DHS, DEH (Paris) PG: Germany, DDR Switzerland, Madras-17.

Convulsions are fits they are commonly called. These are due to abnormal neuron activity within the central nervous system. This is by far the most encountered disorder of childhood and have been met with good success by the Homeopaths all over the world. We are not concerned with convulsions due to other causes except due to Fever here as the actual dangers are too many in this condition. Though the precise cause is not fully understood we know the children below five years are the most prone to convulsions during high febrile conditions - the cause being genetic in nature.

ACUPUNCTURE points to be remembered are:
Disp: MC 6 (pt key), V 63, 62 and 58, GI 4, P 11; Gouv 11.

This can be used along with official or non official medicines and they are a sure adjunct to Homeopaths,

A rapid rise of temperature, a state of being off food for hours before the fit occurs, the fits lasting only a few minutes; genralised and localised; no history and fit only with rapid rise of temperature and the limbs should have no residual weakness are some of the very important diagnostic conditions. Infections play an important part in convulsions.

Brain damage is a compliation very much afraid of by doctors because of such convulsions during fever; due mostly to relative anoxia during convulsions; even though external injury is not altogether forgotten or neglected. sometimes throat secretions got sucked into causing œdema or asphyxia and death also. Unless rapidly arrested convulsions may cause death due to above causes and measures should be rapidly adapted to save the child.

The child must be laid to escape injury during convulsions. The head low positions if not adapted will lead to complications. Tongue depressor or spoon between the molars, is inserted for safety, Intranasal oxygen is necessary when there is cyanosis

The allopaths prescribe usually hypnotics during and as prophylactic also. But in Homeopathy the best in my practise is MORBILLINUM 30th potency or 15th in repeated doses is sufficient for almost all cases.

Morbillinum is a new drug now in use and my use of the same in about a hundred cases will be worthy of study by others if they have not already used this for febrile convulsions

Other common durgs of choice are Gelsem; Bell; Apis; Cupr; Stram; Ver; Aeth; etc are though of much value according to symptoms the above drug MORBILLINUM is the best in my opinion

As a good number of cases of high fever with convulsions in children have been cured by me with MORBILLINUM and as the descriptions of such cases need not be described for want of space I simply repeat that Morbillinum is a drug of choice not only to cure convulsions during hyperpyrexia but also a drug much used by me and others in Europe for prevention of convulsions at future fevers. Once a child gets convulsions then it is probable that is get again such type of fits at a future date if it gets high fevers then it is always wise to give a few doses of MORBILLINUM to prevent the onset of convultions.

Morbillinum has prevented complications like encephalitis and meningitis in several children and as such it has been used by me as a routine remedy in children with convulsion proneness and with high fevers.

Morbillinum is effective if the cause, of high fever is infecetions such as Otitis, tonsils, pyelonephritis, pneumonia, dysentery; etc and irrespective of such causes Morbillinum should be used when there is High pyrexia, paleness of face, violent convuslions. Incontinence of urine may attract the attention of the doctor and then Morbillinum is a remedy of choice.

Morbillinum lessens the neurological disorders following certain fevers and hence alternation of Aconite in simple congestions. Bell or Stram in severe congestions and inflammations, will lead to prompt cure of convulsions.



Even in polio convulsions at the initial stages if they have been given Morbillinum the paralysis attendent are always mild and very rapidly disappear.

Encephalopathies are kept at a minimum by giving Morbillinum during such high fevers.

Morbillinum is a good remedy for Febrile convulsions and must be used at all times to cure or prevent.

*New Books:*

## 'SPECIAL THERAPEUTICS'

**By Dr. S. Srinivasan,** DHS, DEH (Paris)

Madras-17.

| | | |
|---|---|---|
| Available | ... | Rs. 3—00 |
| Postage | ... | Rs. 1—00 |

*Send advance*

Special Commission for 6 copies.

## 73nd PRACTICAL CLASS:

As usual practical demonstration and clinical cases of Female disorder etc by lady doctor and all subjects by specilised doctors will be held in

Madras - during the 20th September, '73.

**Fees: Rs. 55/- only.**

Students from other institutions also can join.

Apply: **Homeo drug stores,**

334, Thambuchetty Street, MADRAS-1.

## ORISSA HOMEOPATHIC BULLETIN.

(MONTHLY JOURNAL IN ORISSA)

**Annual Subscription Rs. 5-00.**

*Editor* - Dr. NATABAR NAIK, D. SC. (HOMEO)
P. O, JAGATSINGHPUR. Dist – Cuttack, (Orissa.)

50 ML.

QUARTERLY.

## THE 50 MILLESIMAL

(The Journal of Pure Homoeopathy)

*Editor:* **Dr R. P. Patel,** D. M. S., D. F. Hom (Lond), L. M. (Dublin)
PARANGOT, Malekal Kodimatha, Kottayam KERALA,

| | | |
|---|---|---|
| **Annual Subscription** | - | **Rs. 5—00** |
| **Single Copy** | - | **Rs. 1—25** |
| **Specimen Copy** | - | **Rs. 1—(0** |

## HOMEOPATHIC UPILFT

A quarterly English - Hindi combined stepped into the 4th yearı

**Annual Subs. for one year Rs. 5—00**
**for two years Rs. 9—00**
**Single Copy. Rs. 1—50**

A leading quarterly magazine of Uttar Pradesh.
AGRAWAL HOMEO HALL, 98/66, Zero Road, ALLAHABAD-3.

# NIDRAN:

***Comp:*** Pass 3x, Hyos. 3x, Nux M 3x, Val 3x, Stram 3x, K. Br. 3x.

Very effective remedy for Sleeplessness in all conditions.
Non toxic.

**50 Tabs ... Rs. 2—50**





**Special Antibiotics etc:**

1. GERMOMYCIN – In capsule form
2. HOMICILLIN – in powder in vial form
3. A C T H, 4x, 5x, 7x - tablet form in strips
4. PENCILLIUM, CHLORAMPHENICOL, SULFONAMIDE } in dilutions, powders etc.

**Special tonics:**

AYAMAL: This is the best iron tonic in
450 gm: Rs. 7-00

SHARKORANGE: This is a body building tonic
225 gms. Rs. 5—00
450 gms. Rs. 9—50

LAWSONE: 32 years' renowned tonic for women's ailments
100 ml. Rs. 3—50

ALFALFA PLAIN:
100 ml. Rs. 3—00
450 ml. Rs. 12—00

ALFALFA 'B': this is with natural vitamins
110 ml. Rs. 3—75
450 ml. Rs. 15—00

any many more: such as ORAL AMPOULES, STRIP PACKINGS, CREAMS etc, etc.

## ஆண்டிபயோடிக் மருந்துகள் :

| | | |
|---|---|---|
| ஜெர்மோமைசின் | — | காப்ஸ்யூல் |
| ஒமிசிலின் | — | வயல்கள் |
| ஏ. சி. டி. எச். 4x 5x 7x | — | ஸ்டிரிப் பாக்கிங் |
| பெனிசிலியம் | | திராவகம் பவுடர் முதலியன |
| க்ளோரம்ஃபெனிகால் | | |
| சல்பனைட் | | |

**பிஸ்கிரீம்:** இன்றைய வளர்ச்சியுற்ற மருத்துவர்கள் உபயோகப்படுத்துவது – எண்ணெய் பிசுபிசுப்பில்லாத "பிஸ்கிரீம்"

பெர்பெரிஸ், அஸ்டிலேகா கலந்த வசீகர கிரீம்

பிளாஸ்டிக் பாட்டில் ரூ. 2-20

## "பயோப்ளக்ஸ்" கூட்டு மருந்துகள்.

நம்பர்கள் 1 முதல் 29 வரை.

20 gm. பிளாஸ்டிக் டப்பி ரூ. 1—00

**ஹானிமான் ஹோமியோ இன்ஸ்டிட்யூட்,**

தபால் பெட்டி எண் 19, திருவாரூர். தென் இந்தியா.



நூலகம்